**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 25/2015 P.W. 6 /L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. சி. தங்கராஜா** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 20.02.2024.**

**அரசு தரப்பு உதவி வழக்கறிஞர் இன்று ஆஜரில்லை என்பதால் சாட்சியை வழக்கின் தன்மைக் கருதியும் நீதியின் நலன் கருதியும் நிலையப்பொறுப்பு அதிகாரியின் முன்னிலையில் பதிவுச் செய்யப்படுகிறது.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

1. நான் தற்பொழுது ஆரல்வாய்மொழி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். 2014 ம் தேதி கருங்கல் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது 18.00 மணிக்கு அபினேஷ், த/பெ. அலாதியூன், அன்பியம் 18, கோடிமுனை என்பவர் நிலையம் ஆஜராகி புகார் மனுவைப் பெற்று அந்த மனுவின் அடிப்படையில் கருங்கல் காவல்நிலையக்குற்ற எண்.583/2014 ச/பி.457, 380 உ. இ 511 இ.த.ச 1860 ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணைக்கும் வைத்தேன். இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** : **குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவுச்செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.